செய்தி வெளியீடு எண்–104 நாள்– 8.2.2008

# செய்தி வெளியீடு

**8.2.2008 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், தமிழ்நாட்டில் ஐந்து மிகப் பெரிய திட்டங்கள் அமைப்பதற்கான செயற்குறிப்புகளுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த ஐந்து திட்டங்களும் ஒரு சேர சுமார் 16,000 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டு வருவதுடன் சுமார் 58,500 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், சுமார் 47,500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் உருவாக்கும்.**

**இத்திட்டங்களாவன,**

**(1) சென்னைக்கருகில் ஒரகடத்தில் ஆண்டொன்றுக்கு 4 லட்சம் வாகனங்களைத் தயாரிப்பதற்கான ரெனால்–நிசான் நட்பமைப்பின் ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டம்,**

**(2) சென்னைக்கருகில் எண்ணூர் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டம், பிள்ளைப்பாக்கம் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 1 லட்சம் நடுரக மற்றும் கனரக வணிக வாகனங்களைத் தயாரிப்பதற்கான அசோக் லேலண்ட் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டம் வல்லம் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 2 லட்சம் இலகுரக வணிக வாகனங்களைத் தயாரிப்பதற்கான அசோக் லேலண்ட் – நிசான் கூட்டுமுயற்சித் திட்டங்கள்,**

**(3) சென்னைக்கருகே ஒரகடத்தில் சிப்காட் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஃப்ளாஷ் கார்டுகள், மீடியா ப்ளேயர்ஸ் போன்ற நினைவாற்றல் சாதனங்கள், சிலிகான் அடிப்படையிலான ஃபோட்டோவோல்டாயிக், மெல்லிய ஃபிலிம் போன்றவைகளைத்**

**தயாரிப்பதற்கான மோசர் பேயர் மற்றும் அதன் இணை நிறுவனங்களின் திட்டம்,**

**(4) சென்னைக்கருகே திருப்பெரும்புதூரில் சிப்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சோலார் ஃபோட்டோ வோல்டாயிக் அமைப்புகளையும், மெல்லிய ஃபிலிம் தொழில்நுட்பப் பொருட்களையும் தயாரிப்பதற்கான அமெரிக்காவைச் சார்ந்த சிக்னெட் சோலார் நிறுவனத்தின் திட்டம்,**

**(5) சென்னைக்கருகே தரமணியில் 25.27 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளுக்காக 4 மில்லியன் சதுர அடி கட்டிடப் பரப்பு கொண்ட சிறப்புப் பொரளாதார மண்டலம் அமைத்து, அதனுடன் ஒருங்கிணைந்த சர்வதேச கூட்ட அரங்கு மையத்தை அமைக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் திருவாளர்கள் டாடா ரியாலிடி மற்றும் இன்ஃப்ராஸ்டிரக்சர் நிறுவனமும் இணைந்து ஏற்படுத்துகின்ற கூட்டு முயற்சித் திட்டம். 1326.42 கோடி ரூபாய் தொகையை நிலக் குத்தகை வாடகையாக ஒரே தடவையில் வசூலித்துக் கொண்டு 25.27 ஏக்கர் நிலம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் குத்தகைக்கு விடப்படும்.**

**இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் மட்டும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள 5 திட்டங்களுக்குமான முதலீடு 16 ஆயிரம் கோடி ரூபாய் என்பதும் இந்த அளவுக்கு ஒரே கூட்டத்தில் இவ்வாறு ஒப்புதல் அளிக்கப்பட்டதும் இதுவே முதல் முறையாகும். இதன் மூலம் 58,500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், சுமார் 47,500 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும்.**

* * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–**9.**